# மார்பகப் புற்று நோய்: விழிப்புணர்வே சிகிச்சையின் அடிப்படை

சென்னை, மார்ச் 26: மார்பகப் புற்று நோய் குறித்து பெண்கள் விழிப்புணர்வுடன் இருப்பதுதான் சிகிச்சையின் அடிப்படையாகும் என்று மியாட் மருத்துவமனையின் இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் கூறினார்.

மியாட் மருத்துவமனையில் 'மார்பக நலன் காத்தல்' என்ற தலைப்பில் பெண்களின் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் புதன்கிழமை நடைபெற்ற ஓவியம் வரைதல் மற்றும் ஜப்பானிய தற்காப்புக் கலை விளக்க நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

"உலக அளவில் 8 பெண்களில் ஒருவருக்கு மார்பகப் புற்று நோய் பாதிப்பு ஏற்படுகிறது. எனினும் மார்பக சுய பரிசோதனை உள்ளிட்டவை மூலம் மார்பகப் புற்று நோய் பாதிப்பை முன்கூட்டியே பெண்கள் கண்டறிந்து ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை எடுத்துக் கொண்டால் முழுமையாக குணம் அடைய முடியும். இதற்காக பிரத்யேக மார்பக பரிசோதனைக்கு மியாட் மருத்துவமனை ஏற்பாடு செய்துள்ளது.



மார்பகப் புற்று நோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக சென்னை மியாட் மருத்துவமனையில் புதன்கிழமை நடைபெற்ற ஜப்பானிய தற்காப்புக் கலை விளக்க நிகழ்ச்சி. பயிற்சியாளர் செந்தில்குமாரின் எதிர்ப்பு மற்றும் புவிஈர்ப்பு விசையை மட்டுமே பயன்படுத்தி ஜப்பானைச் சேர்ந்த மினாரி ஓகாவா (வலது) அவரை வீழ்த்தியது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.

**ஏப்ரல் 13-ல் விழிப்புணர்வு ஓட்டம்:** மார்பகப் புற்று நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த 'பிங்கத்தான்' என்ற 10 கிலோமீட்டர் தொலைவு ஓட்டத்துக்கும் மியாட் மருத்துவமனை ஏற்பாடு செய்துள்ளது. இந்த விழிப்புணர்வு ஓட்டம் சென்னையில் வரும் ஏப்ரல் 13-ஆம் தேதி நடைபெறுகிறது. இதில் 2,000-த்துக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொள்ள உள்ளனர். விழிப்புணர்வு ஓட்டம் தொடர்பான விவரங்களைwww.pinkathon.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்" என்றார் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ்.

முன்னதாக மார்பகப் புற்று நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஓவியங்களை பெண்கள் வரைந்தனர். இந்த நிகழ்ச்சியில் 'பிங்கத்தான்' விழிப்புணர்வு ஓட்ட நிகழ்ச்சியின் தூதரும் இயக்குநருமான மிலித் சோமன், மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.